www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

-செங்கை ஆழியான்-

14


### கலிங்கமாகன்

**கி.பி.1215 ஆம் ஆண்டு**

கலிங்மாகன் என்ற மன்னன் இலங்கையைக் கைப்பற்றி , 1236 ஆம் ஆண்டு வரையும் இருபத்தொரு வருடங்கள் பொலநறுவையிலிருந்து ஆட்சி செலுத்தினான். இலங்கை வரலாற்றில் கலிங்கமாகனின் படையெடுப்பும் ஆட்சியும் மிக முக்கியமான திருப்புமுனையாகக் கருதப்படக்கூடியது. கலிங்கமாகன் தென்னிந்தியாவிலிருந்து இருபத்தினாலாயிரம் தமிழ்க்கேரளப்படை வீரர்களுடன் வந்து பொலநறுவையைக் கைப்பற்றிக் கொண்டான். பொலனறுவை யுகத்தின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியற் குழப்பங்கள் மாகனின் வெற்றிக்குச் சாதமாக அமைந்தன. இவன் தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தானா அல்லது உத்தரதேசத்தின் ஒரு பகுதியிலிருந்து தண்டெடுத்தானா என்பது ஆய்வுக்குரியது. இவனுடைய படைவீரர்களும் இவனுக்குதவியாக வந்த ஜயபாகுவின் படைவீரர்களும் தங்குவதற்கு அரசன் அமைந்திருந்த விடங்களாக ஊர்காவற்றுறையும் வலிகாமமும் அமைந்திருந்தனவெனச் சூளவம்சம் கூறுகிறது. இதனைப் பூஜாவலிய என்ற சிங்கள வரலாற்று நூலும் உறுதிப்படுத்துவதாக இந்திரபாலா குறிப்பிடுகின்றார். இவற்றிலிருந்து உத்தரதேசத்தின் ஒரு பகுதியிலிருந்து மாகனின் படையெடுப்பு நிகழ்ந்ததாகவும் கூறலாம்.

மாகன் பொலநறுவையில் தன் ஆட்சியை நிலைப்படுத்திக் கொண்டான். சிங்களவரால் தமிழரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருந்த நிலங்கள், சொத்துக்கள் என்பனவற்றை இவன் மீளப்பறித்துத் தமிழருக்கு கொடுத்தான். இதனைச் சூளவம்சம் இவ்வாறு கூறும்: ‘சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே தர்மமான சமத்துவம் பாராட்டிய எல்லாளனைப் போல மாகன் விளங்கவில்லை. இவன் தன் தமிழ்துணைவரிடம் விசேஷமாக அன்பு பாராட்டி அவர்களுக்கு வயல்களும் புற்றரைகளும் வீடுகளும் தோட்டங்களும் பணியாட்களும் மாடுகளும் எருமைகளும் தொகுத்துக் கூறுங்கால் சிங்களவரின் உடமைகள் யாவற்றையும் கொடுத்தான். அந்தோ, காலனின் பூதங்கள் போன்ற அந்தத் தமிழ்ப்பூதங்கள் இப்படியே இந்த இராச்சியத்தையும் சமயத்தையும் அழித்தனர் எனச் சூளவம்சம் புலம்பும். தமிழர் பிரதேசங்களைச் சிங்கள ஆதிக்கத்திலிருந்து மீட்டு இராசரட்டை எனப்படும் வடபகுதியில் குடியேறியிருந்த சிங்கள ஆக்கிரமிப்பாளர்களைத் தென்புலம் பெயர வைத்தவன் மாகன் ஆவான் எனச் சில வரலாற்றாசிரியர் கருதுவர். பொலநறுவையைப் பாழாக்கி அங்கிருந்த புத்த பள்ளிகளையிடித்து புத்த பிக்குகளை அவ்விடத்திலிருந்து துரத்தி, வேறுமனேக கொடுந்தொழில்களைச் செய்து பழிபாவத்திற்கு அஞ்சாதவனாய் பொலனறுவையில் அரசாண்டுகொண்டிருந்தானெனச் சிங்கள நூல்கள் குறிப்பிடுவதாக இராசநாயகம் குறித்துள்ளார். இவனை ஒரு வீரசைவனாக கூறும் வரலாற்றாசிரியர்கள் மட்டக்களப்பிவ் இம்மதம் வளர்ச்சியடைய இவன் ஆட்சிக்காலமே காரணம் எனவும் கூறுவர். இவனை ஒரு தமிழ் மன்னனாகக் கூறும் மட்டக்களப்பு மான்மியம் இந்து மதத்திற்கு இவன் ஆற்றிய பணிகள் பற்றிச் சிறப்பாக கருத்துரைக்கின்றது. தவறான மதக்கொள்கையைப் பின்பற்றியவன் எனக் கூறும் சூளாவம்சம் இவன் விகாரைகள், வழிபாட்டிடங்கள் முதலியனவற்றைத் தனது படைவீரர்களின் வதிவிடங்களாக மாற்றினான் எனவும் கூறுகிறது. கலிங்கமாகன் ஆட்சியில் சிங்கள மக்களும் பெளத்த மதமும் பெரிதும் பாதிப்புற்றன. ஆதரவை இழந்தன எனக்கொள்ளலாம். அவர்களைப் பொறுத்தளவில் மாகன் பெருங்கொடுங்கோலனாக விளங்கியுள்ளான். இவனுடைய ஆட்சி தமிழருக்குச் சார்பாக இருந்ததினால் இவன் மீது வெறுப்படைந்த சிங்கள மக்கள் 250 ஆண்டுகள் தலைநகராக விளங்கிய பொலநறுவையைக் கைவிட்டு தென்னிலங்கை நோக்கி இடம் பெயர்ந்தனர். புதிய சிங்கள ஆட்சியின் தலைநகராகத் தம்பதெனியா உருவாக்கப்பட்டது. சிங்கள மக்கள் பாதுகாப்புக் கருதித் தெற்கு நோக்கித் தமது இராசதானிகளை காலத்திற்குக் காலம் அமைத்தபோது வடக்கே பலமான தமிழ் இராச்சியம் ஒன்று உருவாகியது.

கலிங்கமாகனின் ஆட்சியில் சிங்கள மக்களுக்கும் பெளத்த மதத்திற்கும் எதிராக நிகழ்ந்த சம்பவங்களின் எதிரொலி இராசரட்டைப் பிரதேசத்தில் மட்டுமன்றி உத்தரதேசத்தில் குறிப்பாக நாகதீபத்திலும் (யாழ்ப்பாணக் குடாநாட்டில்) எதிரொலித்துள்ளது என ஊகிக்க இடமுண்டு. வலிகாமம் (கதிரைமலை- கந்தரோடை - காசாத்துறை - காங்கேயன்துறை - ஜம்புக்கோளப்பட்டினம் - திருவடி நிலை) , வல்லிபுரம் முதலான பகுதிகளில் பரவி வாழ்ந்த சிங்கள பெளத்தர்களும் தமது பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு இடம் பெயர நேர்ந்தது என ஊகிக்கலம். அதனால் தான் யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெற்றபோது,அல்லது பூநகரியின் சிங்கை நகரிலிருந்து தமிழர் இராச்சியம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாறியபோது மக்கட் குடியேற்றங்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிறுவ நேர்ந்தது. மாகனின் பொலநறுவைக் கைப்பற்றலின் விளைவாக எப்படி இராசரட்டைச் சிங்கள மக்கள் தென்புலம் பெயர்ந்தார்களோ அதேபோல மாகனின் தோல்வியுடன் உத்தரதேசத் தமிழ் மக்கள் வடக்கு நோக்கி இடம் பெயர நேர்ந்துள்ளது. இது பற்றிப் பின்னர் விரிவாக ஆராய்வோம். சோழர் மறைந்தாலும் சோழராட்சி ஈழவரலாற்றில் குறிப்பாகத் தமிழர் வரலாற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. சோழராட்சியின் தவிர்க்க முடியாத விளைவு யாதெனில் ஈழத்தின் மதத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் இருந்து - பிராமண சைவசமய நடைமுறைகளும் திராவிடக் கலையும் கட்டிடக்கலையும் தமிழ் மொழியும் ஊடுருவி மிகப் பலம் வாய்ந்த முறையில் மேலோங்கியமையே, இக்காலந்தொட்டு ஈழத்தின் மீது தென்னிந்தியா செலுத்திய ஆதிக்கம் முற்று முழுதாக இந்து மத உள்ளடக்கத்தினையே கொண்டதாயிருந்தது. மாகனின் ஆட்சிக்காலத்தில் சைவசமயிகளும் தமிழருக்கும் மேலாதிக்க மிக்க மக்களாக விளங்கினர். அதனால் பொலநறுவைக்கு வடக்கே இராசரட்டையில் வாழ்ந்த சிங்கள மக்கள் தென்புலம் பெயர்ந்தது போல, யாழ்ப்பாணக்குடாநாட்டில் வாழ்ந்த சிங்கள பெளத்தர்களும் குடாநாட்டை விட்டு வெளியேறித் தென்புலம் பெயர நேர்ந்தது.




1236 ஆம் ஆண்டு 2 ஆம் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னன், கலிங்க மாகனைப் பொலநறுவையிலிருந்து துரத்தி விட்டான். அந்த யுத்ததில் கலிங்க மாகன் இறந்ததாக, ஆதாரமில்லை என்றும் அவன் வடவிலங்கைக்குத் தனது எஞ்சிய படைகளுடன் சென்றிருக்கவேண்டும் என கா. இந்திரபாலா கூறுகிறார். மதுரைக்கு இடம் பெயர்ந்திருக்கவேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். எவ்வாறாயினும் 1236 ஆம் ஆண்டிலிருந்து 1242 ஆம் ஆண்டு வரை கலிங்க மாகன் எங்கிருந்தானென்பது தெளிவாகவில்லை. இக்குறித்த காலத்தில் வடவிலங்கையைப் பாண்டிமழவன் என்ற அதிகாரியே நிர்வகித்து வந்தானென்பது கயிலாயமாலையிலிருந்து புலனாகின்றது. தென்னிலங்கைச் சிங்களவரசனின் அச்சுறுத்தல் ஆரம்பமானபோது பாண்டிமழவன், கயிலாயமாலையில் விபரித்தவாறு கரந்துறைந்திருந்த கலிங்கமாகனை வலிந்து அழைத்து வந்து விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தி என்ற நாமத்தோடு அரியணை அமர்த்தினான் என்று துணியலாம்.

பாண்டிமழவனைப் பற்றி கைலாயமாலை கூறுவனவற்றைப்

(31ம் பக்கம் பார்க்க)


சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்ற, நங்கையர் மனதைக் கொவ்
நவீன டிசைன்களில் 22 கரட் தங்க நகைகள் செய்துகொள்ள நீ
சுஜி ஜுவல்லரி வேர்
SUJI JEWELLERY W
தொடர்புகளுக்கு: K. THURAI Tel: 031/ 819 18 37 Fax: 031/
Belp Berg Str. 10, 3123 BELP (Belp Banhof ல் இருந்து 2
குறிப்பு: உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய டிசைன்களில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
சிங்கப்பூர் நகைகளும் உடன் விற்பனைக்கு உண்டு.

### ஈழத்தவா வரலாறு.......

(27ம் பக்கத் தொடர்ச்சி)

புனைத்துரைகளென்றோ கற்பனைக் கதைகளென்றோ கொள்ள முடியாது. இவ்வாறு பாண்டிமழவனால் அழைத்து வரப்பட்டவன் விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது ஆரியச் சக்கரவர்த்தி இவனே, விஜய கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தி என்றும் சிங்கை ஆரியன் என்றும் இவன் அழைக்கப்பட்டான். செகராசசேகரன் என்ற சிங்காசனப் பெயரையும் புனைந்து கொண்டான்.

படிப்பகம்